1978 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக்கோரிக்கை எண் : 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,68,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் : 44-க்கு திருவாளர்கள் எம். ஆறுமுகம், எம்.ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் : 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,64,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—3—1978 திங்கட்கிழமை காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*307. 1976 ஆம் ஆண்டிற்கான மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 2 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

* 308. 1977 ஆம் ஆண்டிற்கான மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 3 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*309. 1976 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 5 ஆம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*310. 1977 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 6 ஆம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

311. 1976-77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் 5 ஆம் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

†134. கோரிக்கை எண் 31—அரிசன-பழங்குடி நலத்துறைக் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

†135. கோரிக்கை எண் 31—அரிசன-பழங்குடி நலத்துறைக்கான இணைப்புகள், 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

† 136. அரிசன-பழங்குடி நலத்துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

‡137. எழுதுபொருள் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (தமிழ்).

‡ 138. கோரிக்கை எண் 3--மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

‡ 139. தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்).

---

*தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

†16—3—1978 அன்று அனுப்பப்பெற்றன.

‡ 17—3—1978 அன்று அனுப்பப்பெற்றன.